6. அறிவிப்பு

இலங்கை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் தலைமையில் வந்துள்ள குழுவினர் அவை நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டுக் கொண்டிருப்பதற்கு வரவேற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இலங்கை நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் மாண்புமிகு* W.J.M. *லோகுபண்டாரா தலைமையில் இலங்கை நாடாளுமன்றத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் தற்போது பேரவையில் உள்ள பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் சார்பாகவும், உறுப்பினர்கள் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் அவர்களை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

I am pleased to inform that the delegation consisting of 11 Members of Parliament of Sri Lanka of various political parties headed by Hon. W.J.M. Lokubandara, Speaker, Parliament of Sri Lanka are watching the proceedings of the Assembly from V.I.P. Galleries. On behalf of Hon. Chief Minister, Members of the Legislative Assembly and people of Tamil Nadu, I extend my hearty welcome to them. *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

5. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:

சமயச் சான்றோர் விழா–
"வஞ்சனை செய்வோர்க்கு சிம்மமாய்
வாகைதனைப் படைப்போர்க்கு சிகரமாய்
வாழ வழியறியோர்க்கு வசந்தமாய்
வரையுணர் கொண்டோர்க்கு வெஞ்சுடராய்
வீறுகொண்டெழுந்து, வெற்றிதனை அடைந்து
தங்கத் தமிழ்நாட்டை தரணி போற்றும் நற்சான்றாய்